# அறந்தாங்கி நகராட்சி
## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

### 2022–ம் ஆண்டு பிலவ வருடம் பங்குனி மாதம் 25–ம் தேதி ஏப்ரல் 08.04.2022 வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ள அவசரக் கூட்ட பொருள் விபரம்

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:1** | தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.<br><br>15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.<br><br>அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது. | **தீர்மான எண்:–1**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு: 1 முதல் 8 வரை அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.<br><br>சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.<br><br>நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.<br><br>சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>**<u>சொத்துவரி:</u>**<br><br>**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**<br><br><table><tr><th>பரப்பளவு (ச.அடி)</th><th>உயர்வு செய்வதற்கானகாரணி</th></tr><tr><td><=600</td><td>1.25</td></tr><tr><td>601-1200</td><td>1.5</td></tr><tr><td>1201-1800</td><td>1.75</td></tr><tr><td>>1800</td><td>2</td></tr></table> | |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>காலிமனை வரி சீராய்வு:</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் அறந்தாங்கி நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி(**Current Liabilities**) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | **2.34 கோடி** |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | **0.73 கோடி** |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | **8.54 கோடி** |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | **2.45கோடி** |
| | **மொத்தம்** | **14.06கோடி** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை,

| | | |
|---|---|---|
| | ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், அறந்தாங்கி நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.<br>2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.<br>3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.<br>4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.<br>5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.<br>6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.<br>7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.<br>8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம். (ந.க.எண்:1951/2022/அ1) | |
| | | ஒம்/—இரா.ஆனந்த்<br>தலைவர்,<br>அறந்தாங்கி நகர்மன்றம். |

# அறந்தாங்கி நகராட்சி

## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

## 2022–ம் ஆண்டு சுபகிருது வருடம் சித்திரை மாதம் 16–ம் தேதி ஏப்ரல் 29.04.2022 வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ள சாதாரணக் கூட்ட பொருள் விபரம்

### நகர்மன்றத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் பொருள்:

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:1** | மாவட்ட ஆட்சித்தலைவர், புதுக்கோட்டை அவர்களின் கடிதம் ந.க.எண்.421/ஒபக/2022 நாள்.21.01.2022–ல் பள்ளி மேலாண்மைக்குழு வழிகாட்டுதல்களின்படி அனைத்து அரசு நடுநிலைப் பள்ளிகளிலும் பள்ளிகளின் முன்னேற்றத்திற்காகவும் குழந்தைகளின் தரமாக கல்வியை உறுதி செய்திடவும் அரசு பள்ளிகளை மேம்படுத்துவதற்கும் மாநிலம் முழுவதும் பள்ளி மேலாண்மை குழுக்களை மறுகட்டமைப்பு செய்ய உறுப்பினர்களை தேர்வு செய்வதில் நகர்மன்ற தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் கலந்தாய்வு செய்து அந்த பள்ளி அமைந்துள்ள பகுதியின் உள்ளாட்சி வார்டு உறுப்பினர்கள் இரண்டு உறுப்பினர் தேர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றி அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன்படி இந்நரராட்சிக்கு உட்பட்ட கீழ்கண்ட இரண்டு நடுநிலைப்பள்ளிகளுக்கு கீழ்கண்டவாறு இரண்டு உறுப்பினர்களை தேர்வு செய்ய மன்றம் தீர்மானிக்கப்படுகிறது. | **தீர்மான எண்:–** 2<br>**தீர்மானம்:–** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது |

| வ. எண் | பள்ளியின் பெயர் | நகர்மன்ற உறுப்பினர் பெயர் | வார்டு எண் |
|---|---|---|---|
| 1. | நகராட்சி நடுநிலைப்பள்ளி மேற்கு | திருமதி. அ. மகேஸ்வரி<br>திருமதி. ச. ஸ்ரீவித்யா | 4<br>3 |
| 2. | நகராட்சி நடுநிலைப்பள்ளி எல்.என்.புரம் | திருமதி. ரெ. சரோஜா தேவி<br>திருமதி. பி. ரூபினி | 20<br>21 |

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண்:2</u>** | **<u>நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் பொருள்</u>**<br>**<u>பொருள் எண்:2</u>**<br>அறந்தாங்கி நகராட்சியில் பல்வேறு பகுதிகளில் மின்கம்பங்கள் பழுதடைந்த நிலையில் இருப்பது மட்டுமல்லாது பொதுமக்கள் மீது விழுந்து அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் நிலையில் உள்ளதால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் சாலையில் செல்வோர்கள் மிகவும் அச்சத்துடன் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே நகரின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக பள்ளிகள், நகரின் முக்கிய சாலைகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் பழுதடைந்த நிலையில் உள்ள மேற்படி அனைத்து மின்கம்பங்களையும் மாற்றி பொதுமக்களின் அச்சதைப் போக்கவும், அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுக்கவும் பொதுமக்களின் நலன் கருதி உடன் பழுதுடைந்த அனைத்து மிக்கம்பங்களையும் மாற்றி அமைக்க செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், மூலம் நடவடிக்கை எடுக்க மன்றம் தீர்மானிக்கப்படுகிறது. | **<u>தீர்மான எண்:– 3</u>**<br>**<u>தீர்மானம்:–</u>** <u>தீர்மானம் நிறைவேற்றபட்டது</u> |
| **<u>பொருள் எண்:3</u>** | அறந்தாங்கி நகராட்சி ஆணையர் அவர்களின் பிப்ரவரி–2022 மற்றும் மார்ச்–2022ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது<br><u>அலுவலக குறிப்பு:–</u> பதிவு செய்யலாம் | **<u>தீர்மான எண்:– 4</u>**<br>**<u>தீர்மானம்:–</u>** <u>பதிவு செய்யப்பட்டது</u> |
| **<u>பொருள் எண்:4</u>** | அறந்தாங்கி நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜனவரி–2022, பிப்ரவரி–2022 மற்றும் மார்ச்–2022ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>** பதிவு செய்யலாம் | **<u>தீர்மான எண்:– 5</u>**<br>**<u>தீர்மானம்:–</u>** <u>பதிவு செய்யப்பட்டது</u> |
| **<u>பொருள் எண்:5</u>** | இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்திற்கு "சி" கிரேடு சான்று பெற பேருந்து நிலையத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண்: 2185/2022/இ1) | **<u>தீர்மான எண்:– 6</u>**<br>**<u>தீர்மானம்:–</u>** <u>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u> |

<table>
<tr>
<td><u>பொருள் எண்:6</u></td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான எரிவாயு தகனமேடைக்கு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தினரால் அளிக்கப்பட்ட காற்று மற்றும் தண்ணீர் சட்டத்தின்படி ஒப்புதல் ( Consent Order) 2022-2024 க்கான புதிப்பித்தில் கட்டணம் ரூ.12200/– செலுத்தக்கோரி வரப்பெற்ற தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியாத்தின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கு<br><br><u>அலுவலக குறிப்பு:–</u><br>பொது நிதியிலிருந்து வழங்கலாம் ( ந.க.எண்:1541/2022/இ1)</td>
<td><u>தீர்மான எண்:– 7</u><br><u>தீர்மானம்:–</u> <u>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்:7</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சிக்குட்பட்ட நீர் நிலைகளை மேம்பாடு செய்ய கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021–2022ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 09.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தொழில்நுட்ப தகுதி உள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் அவற்றின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் முடிவுக்கும்.<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1)</td><td rowspan="2">புதுக்குளத்தினை மேம்பாட்டு செய்தல்</td><td rowspan="2">79.90</td><td>திரு.டி.மெய்ஞானம், ஒப்பந்ததாரர்</td><td>0.30% மதிப்பீட்டிற்கு அதிகம்</td></tr>
<tr><td>திரு.பி.மோகன்ராஜ் ஒப்பந்ததாரர்</td><td>0.10 % மதிப்பீட்டிற்கு குறைவு</td></tr>
</table>
<br><u>அலுவலகக் குறிப்பு:–</u><br>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. பி.மோகன்ராஜ், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.4329/2021/இ1)</td>
<td><u>தீர்மான எண்:– 8</u><br><u>தீர்மானம்:–</u> <u>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்:8</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சிக்குட்பட்ட நீர் நிலைகளை மேம்பாடு செய்ய கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021–2022ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 09.03.2022 அன்று</td>
<td><u>தீர்மான எண்:– 9</u><br><u>தீர்மானம்:–</u> <u>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u></td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தொழில்நுட்ப தகுதி உள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் அவற்றின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் முடிவுக்கும்.<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1)</td><td rowspan="2">வெண்ணாவல் குளத்தினை மேம்பாடு செய்தல்</td><td rowspan="2">97.62</td><td>திரு.டி.மெய்ஞானம், ஒப்பந்ததாரர்</td><td>2.57% மதிப்பீட்டிற்கு அதிகம்</td></tr>
<tr><td>திரு. MDR Construction ஒப்பந்ததாரர்</td><td>0.06% மதிப்பீட்டிற்கு குறைவு</td></tr>
</table>
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td><u>அலுவலகக் குறிப்பு:–</u><br>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. MDR Construction, கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.4329/2021/இ1)</td>
<td></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்:9</u></td>
<td>தீனதயாள் அந்தியோதயா யோஜனா (NULM) திட்டத்தின் கீழ் DAY- NULM Special Shelter (தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்) கட்டிடம் அரசு மருத்துவமனை வளாகத்தில் கட்டும் பணிகள் மேற்கொள்ள ரூ.65.00 லட்சம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதில் பணி மேற்கொள்ள கட்டிடத்திற்கான மண் பரிசோதனை மற்றும் வடிவமைப்பு பெற ஆகும் செலவினம் ரூ.59000/– மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>
<u>அலுவலக குறிப்பு:–</u><br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.0740/2020/இ1)<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
3.NULM திட்ட சேமிப்பு மற்றும் வங்கி வட்டி தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளலாம்</td>
<td><u>தீர்மான எண்:– 10</u><br><u>தீர்மானம்:– அலுவலக குறிப்பு 1,2,3, அனுமதிக்கப்பட்டது</u></td>
</tr>
</table>

<table>
<tr>
<td><u>பொருள் எண்:10</u></td>
<td>கலைஞர் நகர்புற சாலைகள் மேம்பாட்டு (KNMT) திட்டம் 2021-22ன் கீழ் நகராட்சி மண்சாலைகளை தார்சாலைகளாக மாற்றம் செய்யும் பணிகள் மேற்கொள்ள ரூ.343.25 லட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதில், மேற்படி பணிக்கு உரிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு வரப்பெற்ற கீழ்கண்ட தொகைப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br><br>
<table>
<tr><td>வ. எ</td><td>நாளிதழின் பெயர்</td><td>பில் எண் மற்றும் நாள்</td><td>விளம்பர செய்யப்பட்ட நாள்</td><td>தொகை</td></tr>
<tr><td>1</td><td>ஃப்ளேம் அட்வர்டைசிங் கம்பெனி பிரைவேட் லிட், சென்னை.<br>(Flame Advertising Company private limited, Chennai)</td><td>P/468/DEC-21 DT:15.12.2021</td><td>23.11.2021</td><td>47303.00</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>மொத்தம்</td><td>47303.00</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:-</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.4328/2021/இ1)<br>
2. கலைஞர் நகர்புற மேம்பாட்டு சேமிப்பு மற்றும் வட்டி தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளலாம்</td>
<td><u>தீர்மான எண்:- 11</u><br><u>தீர்மானம்:- அலுவலக குறிப்பு 1,2, அனுமதிக்கப்பட்டது</u></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்:11</u></td>
<td>கலைஞர் நகர்புற மேம்பாட்டு (KNMT) திட்டம் 2021-22ன் கீழ் நகராட்சி புதுக்குளம் மற்றும் வெண்ணாவால் குளம் மேம்பாடு செய்யும் பணிகள் மேற்கொள்ள ரூ.177.52 லட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதில், மேற்படி பணிக்கு உரிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு வரப்பெற்ற கீழ்கண்ட தொகைப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.</td>
<td><u>தீர்மான எண்:- 12</u><br><u>தீர்மானம்:- அலுவலக குறிப்பு 1,2, அனுமதிக்கப்பட்டது</u></td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>வ. எ</td><td>நாளிதழின் பெயர்</td><td>பில் எண் மற்றும் நாள்</td><td>விளம்பர செய்யப்பட்ட நாள்</td><td>தொகை</td></tr>
<tr><td>1</td><td>ஃப்ளேம் அட்வர்டைசிங் கம்பெனி பிரைவேட் லிட், சென்னை.<br>(Flame Advertising Company private limited, Chennai)</td><td>P/800/FEB-22<br>DT:26.02.2022</td><td>26.2.2022</td><td>69615.00</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>மொத்தம்</td><td>69615.00</td></tr>
</table>
<br>
<u>அலுவலக குறிப்பு:–</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.4329/2021/இ1)<br>
2. கலைஞர் நகர்புற மேம்பாட்டு சேமிப்பு மற்றும் வட்டி தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளலாம்
</td>
<td></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்:12</u></td>
<td>இந்நகராட்சியில் குடிநீர் விநியோகப் பணிகள் மேற்கொள்ள போதிய நிரந்தர பணியாளர் இல்லாத காரணத்தினால் குடிநீர் சீராக விநியோகம் செய்யும் பொருட்டு குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி வெளிக்கொணர்வு முறையில் 3 நபர்களும் மற்றும் நகரமைப்பு பிரிவிற்கு சங்கிலியாள் 1 நபரும் தேவைப்படுவதால் 01.04.2022 முதல் முன்று மாதங்களுக்கு பணி அமர்த்திக்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,50,000/- (ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
குடிநீர் வடிகால் நிதியிலிருந்து வழங்கலாம்<br>
( ந.க.எண்:1974/2022/இ1)
</td>
<td><u>தீர்மான எண்:– 13</u><br><u>தீர்மானம்:–</u> <u>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்:13</u></td>
<td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண் 1725/2022/எம்3 நாள் 24.02.2022ன் படி இந்நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் பயன்பாட்டுக்கு கூடுதலாக புதிய ஈப்பு வாகனம் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் ஜெம் போர்ட்டலில் குறிபிட்டுள்ளபடி சாதாரண மாடல் வாங்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.10,00,000/- (பத்து லட்சம் மட்டும் ) மன்றத்தின் முடிவிற்கு.</td>
<td><u>தீர்மான எண்:– 14</u><br><u>தீர்மானம்:–</u> <u>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u></td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**<br>1.மன்றம் ஏற்கலாம் ( ந.க.எண்:1918/2022/இ1)<br>2.மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளபட்டதினை அனுமதிக்கலா | |
| **பொருள் எண்:14** | நகராட்சி நிர்வாக இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடித எண் 2811/2021/இ1 நாள் 29.03.2022ன் படி இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் சாலைப்பணிகளுக்கு தர பரிசோதனை செய்ய தேவைப்படும் கருவிகள் வாங்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.50,000/- (ஐம்பதாயிரம் மட்டும் ) மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்<br>**அலுவலக குறிப்பு :–**மன்றம் ஏற்கலாம் ( ந.க.எண்:1936/2022/இ1) | **தீர்மான எண்:– 15**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:15** | இந்நகராட்சிக்கு உட்பட்ட (எல்.என் புரம்) லெட்சுமிநரசிம்மபுரத்தில் உள்ள மயானம் தற்போது பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. மேலும் அந்த மயானக்கரை மற்றும் காத்திருப்பு மேடை பழுதடைந்த நிலையில் உள்ளதால் இதனை ச_கவிரோதிகள் சிலர் இந்த இடத்தினை சில சட்டவிரோத செயல்களுக்கு பயன்படுத்துவதாக புகார் வந்ததன் அடிப்படையில் பொது மக்களுக்கு இடையூறாக உள்ளதன் அடிப்படையில் மயானக்கரை மற்றும் காத்திருப்பு மேடையினை இடித்து அப்புறப்படுத்த மன்றம் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண்:1544/2022/இ1) | **தீர்மான எண்:– 16**<br>**தீர்மானம்:–** ஒத்தி வைக்கப்பட்டது. |
| **பொருள் எண்:16** | இந்நகராட்சி பகுதியில் 14 வது தேசிய நிதிக்குழு மான்ய நிதி 2018 –19ன் கீழ் ரூ 9.50 லட்சம் மதிப்பீட்டில் அண்ணா நாயக்கர் தெருவில் முதல் ரீ<br>( 1st Reach) சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சிமெண்ட் சாலையை பொதுமக்கள் மற்றும் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் தார் சாலைகளாக அமைத்து தர கோரியுள்ளனர் அதன் காரணமாக மேற்படி சிமெண்ட் சாலையை தார் சாலைகளாக மாற்றி அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி சாலையினை ஒப்பந்தத்தின் விலை விகித வேறுபாடுமின்றி மதிப்பீட்டின்படி தார் | **தீர்மான எண்:– 17**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1,2,3 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | சாலைகளாக அமைக்க அனுமதிக்கலாம் (ந.க.எண்.0029/2020/இ1)<br>3. நகர்மன்ற தீர்மான எண் 70 நாள் தீர்மானம் 31.8.2021 ரத்து செய்யலாம் | |
| **<u>பொருள் எண்:17</u>** | இந்நகராட்சி பகுதியில் 14 வது தேசிய நிதிக்குழு மான்ய நிதி 2018 –19ன் கீழ் ரூ 9.50 லட்சம் மதிப்பீட்டில் அண்ணா நாயக்கர் தெருவில் இரண்டாம் ரீச் ( 2nd Reach) சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சிமெண்ட் சாலையை பொதுமக்கள் மற்றும் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் தார் சாலைகளாக அமைத்து தர கோரியுள்ளனர் அதன் காரணமாக மேற்படி சிமெண்ட் சாலையை தார் சாலைகளாக மாற்றி அமைக்க மன்ற அனுமதி வேண்டபப்படுகிறது<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி சாலையினை ஒப்பந்தத்தின் விலை விகித வேறுபாடுமின்றி மதிப்பீட்டின்படி தார் சாலைகளாக அமைக்க அனுமதிக்கலாம் (ந.க.எண்.0029/2020/இ1)<br>3. நகர்மன்ற தீர்மான எண் 71 நாள் 31.8.2021 தீர்மானம் ரத்து செய்யலாம் | **<u>தீர்மான எண்:– 18</u>**<br>**<u>தீர்மானம்:–</u>** <u>அலுவலக குறிப்பு 1,2,3 அனுமதிக்கப்பட்டது</u> |
| **<u>பொருள் எண்:18</u>** | 2022–2023 ம் ஆண்டிற்கு இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் ஆழ்குழாய்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ 10.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் நிதியிலிருந்து இப்பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:– 19</u>**<br>**<u>தீர்மானம்:–</u>** <u>அலுவலக குறிப்பு 1,2, அனுமதிக்கப்பட்டது</u> |
| **<u>பொருள் எண்:19</u>** | 2022–2023 ம் ஆண்டிற்கு இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள குடிநீர் விநியோக குழாய் மற்றும் பிரதான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ 10.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு | **<u>தீர்மான எண்:– 20</u>**<br>**<u>தீர்மானம்:–</u>** <u>அலுவலக குறிப்பு 1,2, அனுமதிக்கப்பட்டது</u> |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் நிதியிலிருந்து இப்பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | |
| **பொருள் எண்:20** | 2022–2023 ம் ஆண்டிற்கு இந்நகராட்சி குடிநீர் விநியோகத்திற்கு குளோரினேசன் விநியோகம் செய்தல் மற்றும் குளோரினேசன் இயக்கும் இயந்திரத்தில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ 10.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் நிதியிலிருந்து இப்பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்:– 21**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1,2, அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:21** | இவ்வலுவலகத்தில் இயங்கி வரும் கணினிகள், மோடம், சுவிட்ச் ஆகியவற்றில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல், பழுதான உதிரி பாகங்களை மாற்றுதல், தரம் உயர்த்துதல் மற்றும் இதர பணிகளுக்கும் மற்றும் ஒளிநகல் இயந்திரங்கள், லேசர் பிரிண்டர்கள் மற்றும் டாட்மேட்ரிக்ஸ் பிரிண்டர்கள் ஆகியவற்றிற்கு தேவைப்படும் டோனர்கள். ரிப்பன், ரிப்பன் கேர்ட்ரெட்ச், டிரம், டெவலப்பர், கிளீனிங் பிளோடு, ச்சார்ச் ரோலர், டெஃப்லான் ஸீட், ஹீட் ரோலர் ஆகியவை மற்றும் இதர உதிரிபாகங்கள் ( Consumables) வாங்கிக்கொள்ளுதல், பழுதுநீக்கம் செய்தல். பழுதான உதிரிபாகங்களை மாற்றுதல் மற்றும் வருடாந்திர பராமரிப்பு கட்ணம் (Annual Maintenance charges) செலுத்துதல் மற்றும் இணைய வழி ஒப்பந்தப்புள்ளிகளுக்கான டி.எஸ்.சி கார்டு வாங்குதல்/ காலநீட்டிப்பு செய்தல் மற்றும் பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் முலம் பெறப்பட்டுள்ள வி.பி.என். இணைப்புக்கான கட்டணம் எதிர்வரும் காலங்களில் இணைய இணைப்பின் வேகத்தை அதிகப்படுத்த பெறப்படும் ஏனைய வகையான இணைப்பிற்கான கட்டணம் மற்றும் கணினி பிரிவு தொடர்பான இதர அனைத்துப் பணிகளுக்கும் 2022-23 ம் நிதியாண்டின் உத்தேச செலவினத் தொகை ரூ 10.00 லட்சம் ( ரூபாய் பத்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்:– 22**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1,2, அனுமதிக்கப்பட்டது |

2. மேற்படி பணிகள் ஜெம் ( GEM) விலை விகிதம், கூட்டுறவு அச்சகங்கள், மத்திய அரசின் என்.சி.சி.எஃப் நிறுவனம், கேந்திரிய பன்ந்தர் நிறுவனம் அல்லது விலைப்புள்ளி/ ஒப்பந்தபுள்ளி கோரியோ மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்

**பொருள் எண்:22**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்: 5990/2022/SBM நாள்:11.04.2022 தேதிய கடிதத்தில், தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தின் இந்நகராட்சிக்கு தனி நபர் கழிப்பிடம் (IHHL) (2020–2021–ம் ஆண்டுக்கு) கட்டுவதற்க்கு 16 பயனாளிகள் தேர்வு செய்திட அனுமதித்து கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட கடிதத்தில், தனி நபர் கழிப்பிடம் (1 யூனிட்) 1க்கு ரூ.30,000/– நிர்ணயம் செய்யப்பட்டு, கீழ்கண்டவாறு பங்களிப்பு நிதி தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | தனி நபர் கழிப்பிடம் | 16 UnitsXரூ30000 | 4.80 லட்சம் |
| 2. | மத்திய அரசு நிதி பங்களிப்பு | 16 UnitsXரூ4000 | 0.64 ஆயிரம் |
| 3. | மாநில அரசு நிதி பங்களிப்பு | 16 UnitsXரூ2666 | 0.43 ஆயிரம் |
| 4. | உள்ளாட்சி நிதி பங்களிப்பு | 16 UnitsXரூ2666 | 0.43 ஆயிரம் |

1 Units தனி நபர் கழிப்பிடம் கட்ட நிர்ணயம் செய்யப்பட ரூ.30,000/– தொகையில், மானியம் தொகை ரூ.9332/– போக மீதம் உள்ள தொகை ரூ.20,668/– ஐ CSR நிதி மூலம் வங்கிகள் , நிறுவனங்கள், கம்பெனிகள், மற்றும் பயனாளிகளிடம் இருந்து பெற்று தனி நபர் கழிப்பிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே உள்ளாட்சி நிதி பங்களிப்பு தொகை ரூ.0.43 ஆயிரம் நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும், SBM Portal வழிகாட்டு நெறிமுறைகளின் படி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்:2164/2022/எச்1)

**தீர்மான எண்:– 23**

**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

<table>
<tr><td><u>பொருள் எண்:23</u></td><td>இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் மூலம் இயக்கப்பட்டுவரும் வாகனங்களுக்கு 2022–2023 ஆம் ஆண்டில் கீழ்கண்ட இனங்களுக்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><table><tr><th>வ.எண்</th><th>செலவினம் – விபரம்</th><th>உத்தேச செலவினங்கள்</th></tr><tr><td>1.</td><td>பொது சுகாதாரம் வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து நகராட்சி வாகனங்களுக்கும் சாலை வரி (Road Tax) மற்றும் தகுதிச்சான்று கட்டணம் உள்ளிட்ட அனைத்து வரி செலுத்தும் இனங்கள்</td><td>ரூ.3.00 இலட்சம்</td></tr></table><br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>அவசர அவசியம் கருதி, வாகனங்களுக்கு சாலை வரி, தகுதிச்சான்று கட்டணம் செலுத்த வேண்டியதால், நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 19.04.2022 தேதியில் முன் அனுமதி பெற்று, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்(ந.க.எண்:1613/2022/எச்1)</td><td><u>தீர்மான எண்:– 24</u><br><u>தீர்மானம்:–  அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u></td></tr>
<tr><td><u>பொருள் எண்:24</u></td><td>இந்நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.சு.செந்தட்டிக்காளை என்பவர் களப்பணி உதவியாளர் பணி வழங்க கோரி சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். (MD) No.426 of 2020 in W.P.(MD) No 18143 of 2019-ல் இந்நகராட்சி சார்பாக ஆஜரான திரு.P.மகேந்திரன் வழக்கறிஞர் அவர்களுக்கு உண்டான வழக்கு கட்டணம் ரூ.7,500/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:- அனுமதிக்காலம்</td><td><u>தீர்மான எண்:– 25</u><br><u>தீர்மானம்:–  அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:25** | இந்நகராட்சி குடிநீர் விநியோக லாரி TN55D4245 வாங்கப்பட்டு 23 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. தற்போது அந்த லாரி அடிக்கடி பழுது ஏற்படுவதால் அதன் உதிரி பாகங்கள் கிடைப்பதில்லை என்பதால் குடிநீர் வாகனம் இயக்க மிகவும் சிரமமாக உள்ளது. எனவே தற்போது பயன்பாட்டில் இல்லாத பொது சுகாதாரப்பிரிவு டம்பர் பிளேசர் TN55AZ5800 வாகனம் தற்போது Bin free city ஆக அறிவிக்கப்பட்டதால் மேற்கண்ட டம்பர் பிளேசர் TN55AZ5800 வாகனத்தில் உள்ள டம்பர்பின் உதிரி பாகங்களை அப்புறப்படுத்திவிட்டு அதில் 4000 லிட்டர் கொள்ளளவில் புதிய SS டேங்க் தயார் செய்து பொருத்திகொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.8,00,000/- (v£L லட்சம் மட்டும் ) மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கு<br><br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் ஏற்கலாம் ( ந.க.எண்:6346/2016/இ1) | **தீர்மான எண்:– 26**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:26** | இந்நகராட்சி எல்லைகுட்பட்ட எல்.என்.புரம் பகுதியில் அருள்மிகு செல்வ விநாயகர் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் திரு.தசரதன் த/பெ. பாஸ்கர், திருமதி.லெட்சுமி க/பெ. தசரதன் நகராட்சி கட்டிட அனுமதிபெறாமல் வீடு கட்டிவருவது குறித்து மேற்படி கோவிலின் பரம்பரை அறங்காவலர்கள் திரு,அம்மையப்பன் த /பெ. கோவிந்தசாமி பிள்ளை என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் நகராட்சி ஆணையரை –7ம் பிரதிவாதியாக கொண்டு வழக்கு எண் WP (MD) 22665/2021 தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் மற்றும் உத்தேசசெலவினம் ரூ.25,000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>***அலுவலக குறிப்பு:*** மன்றம் அனுமதிக்கலாம் ( ந. க. எண். 3302/2020/எப்1) | **தீர்மான எண்:– 27**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:27** | இந்நகராட்சி எல்லைகுட்பட்ட எல்.என்.புரம் பகுதியில் அருள்மிகு செல்வ விநாயகர் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் திரு.ரவிச்சந்திரன், திருமதி. நாடியம்மாள் மற்றும் திரு.மா.ராஜா மூன்று நபர்கள் நகராட்சி கட்டிட அனுமதி பெறாமல் வீடு கட்டிவருவது குறித்து மேற்படி கோவிலின் பரம்பரை அறங்காவலர்கள் திரு.அம்மையப்பன் த/பெ. கோவிந்தசாமி பிள்ளை என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் நகராட்சி ஆணையரை முதல் பிரதிவாதியாக கொண்டு வழக்கு எண் WP (MD) 11033/2020 தொடரப்பட்டுள்ளது. மேலும் | **தீர்மான எண்:– 28**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்படி வழக்கின் தொடர்ச்சியாக Cont. Peti. 722/2021 என்ற நகராட்சி ஆணையர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் மற்றும் உத்தேசசெலவினம் ரூ.75,000/—க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>***அலுவலக குறிப்பு:*** மன்றம் அனுமதிக்கலாம் (ந. க. எண். 3302/2020/எப்1) | |
| **பொருள் எண்:28** | இந்நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.சு.செந்தட்டிக்காளை என்பவர் களப்பணி உதவியாளர் பணி வழங்க கோரி சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். (MD) No.426 of 2020 in W.P.(MD) No 18143 of 2019-ல் இந்நகராட்சி சார்பாக ஆஜரான திரு.P.மகேந்திரன் வழக்கறிஞர் அவர்களுக்கு உண்டான வழக்கு கட்டணம் ரூ.5000/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** அனுமதிக்காலம் | **தீர்மான எண்:– 29**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:29** | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் மூலம் இயக்கப்பட்டுவரும் வாகனங்களுக்கு 2022–2023 ஆம் ஆண்டில் கீழ்கண்ட இனங்களுக்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்:– 30**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | செலவினம் –விபரம் | உத்தேச செலவினங்கள் |
|---|---|---|
| 1. | பொது சுகாதாரம் வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து நகராட்சி வாகனங்களுக்கும் இன்சூரன்ஸ் தொகை செலுத்துதல் | ரூ.3.00 இலட்சம் |
| 2. | பொது சுகாதார வாகனங்கள் தகுதி சான்று பெற (FC) வாகனத்தில் உள்ள பழுதுகள் சரி செய்தல் | ரூ.7.00 இலட்சம் |
| 3. | பொது சுகாதார லாரி மற்றும் BOV வாகனங்களுக்கு டயர்யூப் பேட்டரி உள்ளிட்ட உதிரி பாகங்கள் சரி செய்வதற்கு | ரூ.3.00 இலட்சம |
| 4. | பொது சுகாதார லாரி JCB மற்றும் BOV வாகனங்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு | ரூ.5.00 இலட்சம |

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம

| | | |
|---|---|---|
| <u>பொருள் எண்:30</u> | இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் தூய்மை பணியாளராக பணிபுரியும் திரு.ஆ.சுப்பிரமணியன் த/பெ.ஆறுமுகம் என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக புதுக்கோட்டை நகராட்சிக்கு பணி மாறுதல் வழங்குமாறு கோரியுள்ளார், அன்னாரை புதுக்கோட்டை நகராட்சிக்கு பணிமாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு:–</u> மன்றம் அனுதிக்கலாம். (ந.க.எண். 2192/2021/எச்1 | <u>தீர்மான எண்:– 31</u><br><u>தீர்மானம்:– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u> |
| <u>பொருள் எண்:31</u> | இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் உள்ள பொது சுகாதார பணிகள் விபரம் சம்மந்தப்பட்ட வரைபடம் தயார் செய்து வழங்கும் பணி மேற்கொள்ள தனி அலுவலர் மன்ற தீர்மான எண்: 99, நாள்: 30.09.2021 ல் ரூபாய் 1.00 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது, மேற்கண்ட பணிக்கு 18.11.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. | <u>தீர்மான எண்:– 32</u><br><u>தீர்மானம்:– அலுவலக குறிப்பு1,2 அனுமதிக்கப்பட்டது</u> |

| வ. எண் | நிறுவனங்களின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | AJ CONSTRUTION, ARANTHANGI | 9,600.00 |
| 2) | GURUMOORTHY CONSTRUTION, ARANTHANGI | 10,880.00 |
| 3) | GANESH CONSTRUTION, ARANTHANGI | 12,000.00 |

<u>அலுவலகக் குறிப்பு:–</u>

1) குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள AJ CONSTRUTION, ARANTHANGI நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்
2) பொதுசுகாதாரபணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதனையும் மன்றம் அங்கீகரிக்கலாம் (ந.க.எண். 5034/2021/எச்1)

<table>
<tr>
<td><u>பொருள் எண்:32</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சிப் பகுதிகளில் உள்ள வீடுகள், ஹோட்டல்கள், வணிக நிறுவனங்களில் இருந்து பெறப்படும் குப்பைகளில் இருந்து தனியாக பிரித்து எடுக்கப்படும் மறு சுழற்ச்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக் கழிவுகள் அனைத்தும் இந்நகராட்சி வாகனங்கள் மூலம் நகராட்சிக்கு சொந்தமான கலவை உரக்கிடங்கில் RRC மையத்தில் சேமித்து, பேலிங் இயந்திரம் மூலம் சுமார் 100 கிலோ கொண்ட கட்டுகளாக பேக்கிங் செய்து, லாரி மூலம் அரியலூரில் உள்ள சிமெண்ட் ஆலைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.<br>மேற்கண்ட பேலிங் இயந்திரத்தில் ஏற்படும் பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவு ரூ.1.00 லட்சத்திற்கு இந்நகராட்சி தனி அலுவலர் தீர்மானம் எண்:207, நாள்:28.02.2022 தேதியில் அனுமதி பெறப்பட்டு உள்ளது.<br>மேற்கண்ட பேலிங் இயந்திரத்தை SRI Vaanchiya ENGG Works TRICHYநிறுவனம் 25.03.2022 தேதியில் ஆய்வு செய்து, ஆயில் சரவீஸ் செய்து, பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு ரூ.32,0000,– மற்றும் GST சேர்த்து வழங்க விலைப்புள்ளி வழங்கி உள்ளனர். எனவே மேற்கண்ட நிறுவனத்தினர் வழங்கி உள்ள விலைப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்(ந.க.எண்:1549/2022/எச்1)</td>
<td><u>தீர்மான எண்:– 33</u><br><u>தீர்மானம்:– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்:33</u></td>
<td>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு கழிவு நீர் அகற்றும் வாகனம் TN- 55- H- 9239 பராமரிப்பு பணி மற்றும் தகுதிச்சான்று பெறுவதற்கான பழுதுகளை நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள தனி அலுவலர் மன்ற தீர்மான எண்–2 நாள்: 17.05.2021 ரூபாய் 10.00 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது, மேற்கண்ட பணிக்கு கடந்த 15.03.2022 ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br><table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>தொகை</th></tr>
<tr><td>1)</td><td>திருமதி. கே. தேன்மொழி, ஒப்பந்ததாரர்<br>127 சக்தி ரெத்தினம் இல்லம் மெரினா நகர், அறந்தாங்கி</td><td>90,000.00</td></tr>
<tr><td>2)</td><td>திரு.டி. மெய்ஞானம், ஒப்பந்ததாரர் 306 / 5G கங்காதாரபுரம் அறந்தாங்கி</td><td>85,000.00</td></tr>
</table></td>
<td><u>தீர்மான எண்:– 34</u><br><u>தீர்மானம்:– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u></td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்: 2ல் கண்டுள்ள திரு.டி மெய்ஞானம், அறந்தாங்கி, அவர்களின் குறைவாக உள்ள ஒப்பந்தப்புள்ளி ரூ. 85,000/க்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்:0145 /2018/எச்1)** | |
| **<u>பொருள் எண்:34</u>** | இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தில் 12 தினக்கூலி பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் மேற்கண்ட பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.250 வீதம் தினக்கூலியாக 2022–2023 ஆம் ஆண்டிற்கு மொத்த ஊதியம் வழங்கும் செலவு ரூ.11,00,000/– ஆகும் மேற்கண்ட தொகையில் பணியாளர் வருங்கால வைப்பு நிதியாக (EPF) 13% சதவீதம் நகராட்சி நிர்வாக பங்கு தொகையாக (Employer Share ) ரூ.1,50,000/– 2022–2023ஆம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டி உள்ளது. மேற்கண்ட தொகை ரூ.1,50,000/– நகராட்சி பொது நிதியில் இருந்து செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்:164 / 2022 / எச்1 | <u>**தீர்மான எண்:– 35**</u><br><u>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u> |
| **<u>பொருள் எண்:35</u>** | அறந்தாங்கி நகராட்சி பகுதியில் கோபாலசமுத்திரம் பகுதியில் உள்ள Micro ComPosting Center –ல் மக்கும் குப்பைகளை கொண்டு கலவை உரம் தயார் செய்யும் மையத்தில், மக்கும் குப்பைகளை 20mm முதல் 40mm வரை நுண் துகள்களாக அரைப்பதற்க்கு Conveyer Belt Shredding Machine. நிறுவப்பட்டு உள்ளது. மேற்கண்ட இயந்திரத்தில் உள்ள பழுதுகளை சரி செய்வதற்க்கும் பராமரிப்பு பணிகளுக்கு ஆகும். உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சம் ரூபாய்க்கு இந்நகராட்சி தனி அலுவலர் தீர்மானம் எண்.103 நாள்.30.09.2021 தேதியில் அனுமதி பெறப்பட்டு உள்ளது.<br>தற்பொழுது மேற்கண்ட இயந்திரத்தை LINGA AGRI TRADING AND MACHINERY PRAVATE LIMITED, திருப்பூர் நிறுவனத்தார் 23.03.2022 தேதியில் நேரடி ஆய்வு செய்து, பழுது நீக்கம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு கீழ்கண்டுள்ளவாறு விலைப்புள்ளி அளித்துள்ளனர். | <u>**தீர்மான எண்:– 36**</u><br><u>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u> |

| வ. எண் | DescriPtion | Price | 18% Tax | Total |
|---|---|---|---|---|
| 1. | Shreding Machine (Service Charge's including Labour and Transport Charge's) | 73,000- | 13,140- | Rs.86,140- |
| 2. | Conveyer Belt Replacing | 36,000- | 6,480- | Rs.42,480- |
| | | | மொத்தம் | Rs.1,28,620- |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளியினை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.4590/2021/எச்1)

ஒம்/–இரா.ஆனந்த்
தலைவர்,
அறந்தாங்கி நகர்மன்றம்.